**அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (ஏஐயூடீபீ) - 2022**

---

அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஐயூடீபீ) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மைக்கும் இடையே 2016 திசெம்பர் 01 ஆந் திகதி கைசச்சாத்திடப்பட்ட (2017 ஆகஸ்ட் 31, 2018 மே 14 மற்றும் 2021 மார்ச் 14 ஆந் திகதிகளில் திருத்தப்பட்ட) சீஎல்கே - 100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஐயூடீபீ) அமுலாக்கல் முகவராகவுமுள்ளது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பகுதிகளுக்கு இடையே தளத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியத்தினை பாதுகாக்கும் நோக்குடன் இணைந்த அபிவிருத்தியின் சமச்சீர் வளர்ச்சி முறையொன்றினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,025.18 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,354.32 மில்லியனிற்குச் சமமான யூரோ 52.00 மில்லியன் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 1,670.86 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு இணங்கிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன், 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும்,திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2023 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் 23(அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பான நாணயமாற்று சீராக்கம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 702 | கணக்குகள் தயாரித்கும் போது நாங்கள் கடன் கொடுப்பவரின் வங்கி கணக்குகள் மற்றும் TOD உடன் எங்களால் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | நாணயமாற்று சீராக்கங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 03 செயத்திட்டங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பெறுமதி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி மற்றும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய தொகை அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்துது. | 165.36 | மேலே குறிப்பிடப்பட்ட தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைத்தளங்களில் உள்ள பொருட்களுக்கான முற்பண கொடுப்பனவு நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைக் கணக்கு அப் பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 10.63 | எங்களால் வேலைத்தளத்திலுள்ள பொருட் செலவினங்களை செலுத்தும் போது கணக்கீடு செய்யப்படுகின்றது. அதற்குக் காரணம் இது குறுகிய காலத்தில் பயன்படுத்தப்படுகின்றமையால் அடுத்த IPC ,y; கணக்கீடு செய்யப்படுகின்றது. | நிதிக்கூறறுக்களில் சரியான பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| 01 | நிலைபேறான நகர அபிவிருத்தி | | | | |
| | தொகுதி 03 | 100 | 85 | மீளாய்வாண்டில் ரூபா 2,123.19 மில்லியன் பெறுமதியை உடைய 05 தொகுதிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரையில் 02 தொகுதிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருநத்து. எனினும் பூர்த்தி செய்யப்படாத இலக்கம் 03 மற்றும் 04 தொகுதிகளுக்குரிய தாமத காலம் 04 மாதம் முதல் 07 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அது செயற்திட்டத்தின் செலவினம் மற்றும் காலம் அதிகரித்தமைக்குத் தாக்கம் அளித்திருந்ததுடன் இந்த தாமதத்திற்கு வருகைகளின் தாமதமும், நலிவான ஒப்பந்த மேற்பார்வையும் காரணமாக இருந்தது. | நலிவான ஒப்பந்த மேற்பார்வை |
| | தொகுதி 04 | 100 | 90 | | |

**முகாமைத்துவத்தின் பதில்**

உப செயற்திட்டங்கள் தாமதமடைவதற்கு COVID - 19 தாக்கம் மற்றும் நாடு முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடி பிரதான காரணமாக இருந்தது. ஏனினும் ஒப்பந்த பெறுமதியை விஞ்சாத வகையில் கிரயத்தை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்காக நிர்மாண வேலைகளை உன்னிப்பாக அவதானித்தல் வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அ) | கடன் தொகையில் 62 சதவீதமான ரூபா 5,025 மில்லியன் பெறுமதியான 07 தொகுதிகள் 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2022 திசைம்பர் 31 வரையும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்ட கால எல்லையில் அந்த செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2022 இன் நடுப்பகுதியின் போது முகங்கொத்த நிதி நெருக்கடியின் காரணமாகவும், மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்குமாறு AFD மூலம் ஆலோசணை வழங்கியதன் காரணமாகவும் 2022 ஆம் ஆண்டில் 7 தொகுதிகள் கையளிக்க முடியாதிருந்தது. | மிகுதி வேலைகளை விரைவாக செய்வதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் 04 ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக வேலைப்பூர்த்தி உறுதிப்படுத்தல் இந்த அறிக்கை விநியோகிக்கப்படுகின்ற திகதி வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கொடுப்பனவுகளுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் அலகினால் செயற்திட்டம் பூர்த்தி செய்தல் அறிக்கை மற்றும் செயற்திட்டத்தைக் கையளிக்கும் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | வேலைபூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வேலைப்பூர்த்தி சான்றிதழ் விநியோகிக்கப்படல் வேண்டும். |
| இ) | தெற்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி ரூபா 1,176 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 செப்டெம்பர் 01 ஆம் திகதி செயற்த்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 வரையில் செயற்த்திட்டத்திற்காக ரூபா 243.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதி பற்றாக்குறையின் காரணமாக பெரும்பாலான நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. | நாடு முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடி மற்றும் கடன் வழங்குகின்ற நிறுவனம் கடனை நிறுததியதன் காரணமாக செயற்திட்டத்தை திட்டத்தின் பிரகாரம் செய்வதற்கு முடியாதிருந்தது. | மிகுதி வேலை நடவடிக்கைகளை குறித்துரைத்த நேரத்தில் நிறைவேற்றுவதற்கு விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 நிதியத்தின் பயன்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரை இணங்கப்பட்ட ரூபா 10,025 மில்லியன் கடன் தொகையில் ரூபா 2,164 மில்லியன் (21 சதவீதம்) மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் விரிவான வடிவமைப்புக்களை சமர்ப்பிப்பதற்கு 07 வருட காலம் தாமதம் ஏற்பட்டமை அந்த நிலைமைக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடன் பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | 7 ஆவது தொகுதியான வடக்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தை நிர்மாணிப்பதன் கீழ் நீர்ப்பாசன உத்தியோகபூர்வ இல்ல கட்டடத்தை ஏனைய வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான இழப்பீடாக ரூபா 45 மில்லியன் தொகை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த தொகுதியை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மே 31 ஆம் திகதி வரையும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட அந்தத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கைப்பற்றப்பட்ட காணி அநுராதபுர மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் எதிர்கால அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுவதுடன் அதனால் இந்தக் காணியை கைப்பற்றுதல் மேற்கொள்ளப்படவில்லை. | இழப்பீட்டுத் தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆ) | செயற்திட்ட செயற்பாடுகளின் நிதியப்பாடு மற்றும் பூர்த்திகளை அளவிடுவதற்காக பிரதான செயலாற்றல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவுகளின் கட்டமைப்பு (RF) பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் ஸ்தாபிப்பதற்காக AFD இனால் அனுமதிக்கப்படவில்லை. | ''SMART'' KPI'S அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| இ) | கடன் வசதிகள் உடன்படிக்கையின் படி 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியை உடைய 12 தொகுதிகள் பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் ரூபா 5,025 மில்லியன் பெறுமதியான 07 தொகுதிகளின் | நாடு முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடியின் காரணமாக செயற்திட்டத்திற்கு 2022 ஏப்ரல் மாதத்தின் பின்னர் அவற்றின் செயற்பாடுகளை திட்டமிடுவதற்கு | செயற்திட்டத்திற்கு மேலதிக செலவினங்கள் இன்றி செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் 2023 மே 31 ஆம் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடன் வசதிகள் 2023 செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலை, செயற்திட்டத்தின் இறுதி வரையில் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | முடியாதிருந்ததுடன் தற்போது திறைசேரி நிதியம் வழங்குவதுடன் கலந்துரையாடலின் பின்னர் குறைந்த மட்டத்தில் தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு செயற்திட்டம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகிறது. | வேண்டும். |
| ஈ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்திட்ட பதவியணியின் ஊழியர் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையினால் நீடிக்கப்பட்ட செயற்திட்ட கால எல்லையில் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யும் இயலுமை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். | ஏற்றுக்கொள்கிறோம். | தேவையான செயற்திட்ட பதவியணியினர் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| உ) | சொத்து உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்ட செயற்திட்ட சொத்துக்களில் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்காக குறித்துரைத்த சொத்து முகாமைத்துவ திட்டமொன்று செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு உப செயற்திட்டத்திற்காகவும் ஆன சொத்துக்கள் முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான மனித வளம் செயற்திட்டத்தில் காணப்படவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஊ) | மீளாய்வாண்டில் தொழில்நுட்ப செயல்முன்னேற்ற அறிக்கையுடன் சுற்றாடல், பாதசாரிகள் மற்றும் சமூக மேற்பார்வை அறிக்கையை தயாரித்து நிதி வழங்குகின்ற முகவராண்மைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | அது 2023 யூன் மாத இறுதி அளவில் தொழில்நுட்ப அறிக்கையுடன் AFD இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் சீரான செயற்பாட்டிற்காக சுற்றாடல் மற்றும் சமூக அவதானிப்பு அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.5 பயனற்ற செலவினம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | தொகுதி 01 இன் கீழ் புகையிரத பிளாஸா அபிவிருத்தி செயற்திட்டம் ரூபா 98 மில்லியன் பெறுமதியில் பூர்த்தி செய்து 2022 ஆம் ஆண்டின் போது புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது, எனினும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை உரிய பராமரிப்பு இன்மையின் காரணமாக 2023 மே 31 வரையும் வெற்றிடமாக காணப்பட்டது. அதனால் புகையிரத திணைக்களத்துடன் | தீர்வொன்றை தயாரிப்பதற்கும், அதன் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும், நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்துள்ளது. | புகையிரத திணைக்களத்துடன் நீண்ட கால உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீண்ட கால ரீதியான செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாமையினால் புகையிரத பிலாஸா கட்டிடம் பயனற்ற சொத்தொன்றாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| ஆ) | சுரபுற திறந்த வெளி திரையரங்கு மறுசீரமைப்பு மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் திறந்த வெளி திரையரங்கின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 90 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், பிரதான உபகரணம் மற்றும் பொருட்கள் (மின்குமிழ்கள், ஆசனங்கள்) 2023 மே 31 வரையும் வழங்கப்படாமையின் காரணமாக அந்த திரையரங்கை பயன்படுத்துவதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது. நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 285.76 மில்லியன் செலவினம் எதிர்காலத்தில் பயனற்ற செலவினமாக இருக்கும் என்பது கணக்காய்வின் கருத்தாகும். | AFD இனால் நிதியம் வழங்குதல் தற்காலிகமாக கைவிடப்பட்டமையால் இறுதி வேலை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதி காணப்படவில்லை. | தொடர்ந்தும் தாமதிக்காமல் பிரதான உபகணரங்களை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். |